بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)
அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 01.07.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் ரமலானுடைய நோன்புகள் கடமையாக்கப்பட்டதற்கான கட்டளை வழங்கிய போது அத்துடன் அய்யாமம் மஃதூதாத் என்றும் கூறிகின்றான். அதாவது எண்ணி சில நாட்களே என்று கூறுகிறான். ரமனான் தொடங்கிய போது வெப்ப காலமாக இருக்கின்றது. இந்த 30 நாட்கள் எப்படி கழியப் போகின்றது ? என்று நம்மில் பலர் எண்ணியிருப்பார்கள். ஆனால் அல்லாஹ் கூறியது போன்று எண்ணி சில நாட்களாகவே இருந்தன.

இன்று ரமலானுடைய கடைசி ஜுமுஆவாகும். இன்னும் ஐந்து நோன்புகள் உள்ளன. மற்ற இடங்களில் நான்கு நோன்புகள் எஞ்சியிருக்கலாம். இந்த நான்கு, ஐந்து நாட்களில் ரமலானிலிருந்து முழுமையாக பயன்பெற முயற்சி செய்ய வேண்டும். ரமலானிலிருந்து முழுமையாக பயன் பெறுவதில் என்ன குறைகள் இருந்தனவோ அதனை அகற்ற இந்த எஞ்சிய நாட்களில் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வோ எங்களது குறைகளை திரையிடுவாயாக என்று நாம் அவனிடத்தில் துஆ செய்ய வேண்டும். ரமலானின் பரக்கத்துகளிலிருந்து இழப்பிற்குரியவர்களாக நம்மை அல்லாஹ் ஆக்கி விடாமல் இருப்பதற்கும் துஆ செய்ய வேண்டும்..

இன்று நான் கூறியது போன்று ரமலானின் கடைசி ஜுமுஆவாகும். இதனை பொதுவான சொல் வழக்கில் ஜுமுஅத்துல் விதா என்று கூறுவார்கள். பாமர முஸ்லிம்கள் இந்த ஜுமுஆவை ரமலானின் கடைசி ஜுமுஆவாக கருதியவாறும், இந்த ஜுமுஆவில் செய்யப்படக்கூடிய அனைத்து துஆக்களும் ஒப்புக் கொள்ளப்படும் என்ற எண்ணத்திலும் தொழுகின்றார்கள். மேலும் இந்த ஜுமுஆவை தொழுது விடுவதனால் ஆண்டு முழுவதும் விடுபட்டு போன தொழுகைகள் ஜுமுஆக்கள் மற்றும் ஏனைய வணக்கங்களுக்கு பரிகாரமாக அது அமைந்து விடுகின்றது என்றும் எண்ணம் கொண்டுள்ளனர். ஆனால் ஒரு உண்மையான நம்பிக்கையாளருக்கு இந்த எண்ணம் இருக்காது. இது முற்றிலும் தவறான எண்ணமாகும். ஒரு உண்மையான நம்பிக்கையாளரை பொருத்தவரை இது போன்ற விஷயங்கள் மற்றும் எண்ணங்கள் மார்க்கத்தை எள்ளி நகையாடுகின்ற காரியமாகும்.

முஸ்லிம்களிடம் இந்த நடைமுறை இருந்து வருகிறதே ? அவர்கள் ஜுமுஅத்துல் விதா நாளன்று நான்கு ரக்அத்துகள் தொழுகின்றார்கள். அதற்கு அவர்கள் கஸாயே உமரி வாழ்நாள் பரிகாரம் என்று பெயர் வைக்கின்றார்கள். கடந்த காலங்களில் அவர்கள் விட்டு விட்ட தொழுகைகளுக்கு பரிகாரமாக இந்த தொழுகை அமைவதாக அவர்கள் கருதுகின்றனர். இதற்கு ஏதும் ஆதாரம் உள்ளதா ? இதன் உண்மை நிலை என்ன ? இது ஆகுமானதா ? என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒரு முறை ஒரு சபையில் கேட்கப்பட்டது.

அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். இது வீணான காரியமாகும். எந்த நபர் ஆண்டு முழுவதும் வேண்டுமென்றே தொழாமல் இருந்து விடுகின்றாரோ மேலும் அவர் கஸாயே உமரி வர்ழநாள் பரிகார தொழுகையை தொழுவதனால் அது அந்த தொழுகைகளுக்கு பரிகாரமாக அது அமைந்து விடும் என்று தொழாமல் இருக்கின்றாரோ அவர் பாவம் செய்தவர் ஆவார். எவர் வெட்கப்பட்டு தவ்பா செய்கின்றாரோ மேலும் எதிர்காலத்தில் நான் எந்தத் தொழுகையும் கைவிட மாட்டேன் என்ற உறுதி கொண்டவாறு தொழுகின்றாரோ அவருக்கு அது தடையில்லை.

அன்னார் கூறினார்கள்: இவ்விஷயத்தில் நாம் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடைய கூற்றையே பதிலாக கூறுவோம். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடைய சம்பவம் இதுவாகும். ஒரு முறை ஒரு நபர் பொருத்தமற்ற நேரத்தில் தொழுது கொண்டிருந்தார். அது தொழுகைக்குரிய நேரமாக இருக்கவில்லை. ஆனால் அவரோ தொழுது கொண்டிருந்தார். அப்போது ஒருவர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடத்தில் கூறினார். நீங்கள் காலத்தின் கலீஃபா ஆவீர்கள். நீங்கள் ஏன் இவரை தடுப்பதில்லை ? எனக் கேட்டார். அதற்கு அன்னார் கூறினார்கள். நான் இந்த வசனத்தின் கீழ் வந்து விடுவேனோ என அஞ்சுகின்றேன். அரஅய்த்தல்லதி யன்ஹா அப்தன் இதா சல்லா அதாவது தொழுகின்ற நபரை தடுக்கின்றவரை நீர் காணவில்லையா ? என்பது அந்த வசனமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இதே விஷயத்தை கருத்தில் கொண்டவாறே இவ்விஷயத்தில் இந்த மார்க்கத் தீர்ப்பை வழங்கியுள்ளார்கள். ஆனால் அச்செயலை சோம்பேறித்தனம் என்றும் முயலாமை என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். கஸாயே உமரி வாழ்நாள் பரிகார தொழுகை என்ற நிய்யத்திலும், சீர்திருத்தத்தை கருத்தில் கொள்ளாமலும் தொழப்பட்டால் அது தவறாகும். ஆனால் இன்றைய நாளுக்குப் பிறகு நான் தொடர்ந்து தொழுவேன். தொழுகையை கைவிட மாட்டேன் என்ற நிய்யத்தில் ஒருவர் தொழுவார் என்றால் அது ஆகுமானதாகும். இல்லையென்றால் மற்ற நிலையில் அந்த நபர் பாவம் செய்தவர் ஆவார்.

நம்பிக்கையாளர் அல்லாஹ்வால் கூறப்பட்ட நன்மைகளை எப்போதும் தொடர்ந்து செய்து கொண்டிருப்பார். அவர் அல்லாஹ்விற்குரிய நன்றி உணர்வால் நிறைந்திருப்பார். அவர் ரமலானை கடப்பது அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காகவே இருக்கும். அவர் அல்லாஹ்வின் கட்டளையின் படி செயல்பட்டவாறு ரமலானை கடந்து அதை வழியனுப்பும் போது நாம் ரமலானை விட்டு பிரிகின்றோமே என்ற மிக கனத்த இதயத்துடன் தான் ரமலானை வழியனுப்பி வைப்பார். ஆனால் இந்த நாட்களின் நினைவை அவர் எப்போதும் தனது உள்ளத்தில் பசுமையாக வைத்திருப்பார். அவர் ரமலானில் என்ன என்ன அன்பான மற்றும் நல்ல விஷயங்களை கற்றுக் கொண்டாரோ அதனை அவர் எப்போதும் அசை போட்டுக் கொண்டே இருப்பார். ரமலானில் இறை வணக்கத்தின் பக்கம் அவருக்கு ஏற்பட்ட கவனத்தை எப்போதும் அவர் உயிருடன் வைத்திருப்பார். ஒருபோதும் இறை நெருக்கத்தைப் பெறுவதிலிருந்து எமது பாதங்கள் நின்று விடாது என்றே அவர் கூறுவார். இறைவா ! உனது அன்பின் விநோத காட்சிகளை நாங்கள் கண்டோம். நாங்கள் நடந்து உன்னை அடைய முயற்சி செய்கின்ற போது நீ உனது வாக்குறுதிக்கேற்ப எங்களை நோக்கி நீ ஓடோடி வந்து விடுகின்றாய் என்றே அவர் கூறுவார்.

எனவே நம்மால் உலகியல் தொடர்புகளின் நினைவுகளை பசுமையாக வைத்துக் கொள்ள முடியும் போது மிகவும் அன்பிற்குரிய இறைவனின் நினைவை மறந்து விடுவதும், அவனது கருணைகளை மறந்து விடுவதும் எங்கனம் சாத்தியமாகும். கருணை காட்டுகின்ற அல்லாஹ்வின் வழிமுறைகள் முற்றிலும் விநோதமானதாகும். இது அல்லாஹ்வின் எத்துனை பெரிய கருணையாகும். அவன் இந்த பிரிவிற்கு பிறகு அவனது நினைவுகளை பசுமையாக வைத்திருக்க அவனது நினைவுகளை மறப்பதிலிருந்து நம்மை காப்பாற்றவும் அவனது நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருக்கவும் ஏழு நாட்களுக்குப் பிறகு மீண்டும் இதே போன்று ஒரு நிகழ்ச்சியை நடத்துவதற்கான ஏற்பாட்டைச் அவன் செய்திருக்கின்றான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஜுமுஆ நாளன்று ஒரு நேரம் வருகின்றது. ஒரு முஸ்லிம் அதில் தொழுதவாறு எந்த துஆ செய்தாலும் இறைவன் அதனை ஒப்புக் கொண்டு விடுகின்றான். ஆனால் அந்த நேரம் மிக குறுகிய நேரமாகும். எனவே இன்றைக்குப் பிறகு அல்லாஹ்வினுடைய இந்த நெருக்கத்திற்குரிய தருணத்திலிருந்து நாம் பிரிந்து விடப் போவதில்லை. மாறாக, இந்த தருணம் ஏழு நாட்களுக்குப் பிறகு நமக்கு மீண்டும் கிடைக்க இருக்கின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை விரைவாக சந்திப்பதற்கும் அவனது நெருக்கத்தை பெறுவதற்குமுரிய வழிமுறைகளை நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். ஐந்து நேரத் தொழுகைகள் இருக்கின்றன. அடுத்து ஒரு ஜுமுஆவிற்குப் பிறகு அடுத்த ஜுமுஆ இருக்கின்றது. ஒரு ரமலானிற்குப் பிறகு அடுத்த ரமலான் வருகின்றது. இதை அனைத்தும் தமக்கிடையில் ஏற்படக்கூடிய பாவங்களுக்கு அவை பரிகாரமாக அமைந்து விடுகின்றன. ஆனால் நிபந்தனை என்னவென்றால் மனிதன் பெரிய பெரிய பாவங்கள் செய்வதிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

நான் தொடக்கத்தில் ஓதிய திருக்குர்ஆன் வசத்தில் கூட அல்லாஹ் ஜுமுஆவின் முக்கியத்துவத்தை பற்றியே கூறி இருக்கின்றான். ஜுமுஆவிற்குரிய நேரம் ஆகிவிட்டால் தனது எல்லா பணிகளையும் வியாபாரத்தையும் விட்டு விட்டு ஜுமுஆவிற்கு வந்து விட வேண்டும். ஜுமுஆ குத்பா கூட தொழுகையின் ஒரு பகுதியே ஆகும். எனவே அதில் சோம்பேறித்தனத்தை காட்டக் கூடாது. தொழுகை ஆரம்பமாவதற்கு முன் நாம் சென்று விடலாம் என்று எண்ணக் கூடாது. மாறாக, குத்பாவிற்கு வந்து சேர்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இங்கு நான் ஒரு முக்கியமான விஷயத்தையும் கூறிக் கொள்கின்றேன். இக்காலத்தில் அல்லாஹ் நமக்கு M.T.A என்ற ஒரு ஏற்பாட்டை தந்திருக்கின்றான். ஐரோப்பாவிலும், ஆப்ரிக்காவின் சில நாடுகளிலும் ஜுமுஆவிற்கான நேரம் ஒன்றாகவே உள்ளது. எனவே நேரம் ஒரே நேரமாக இருக்கும் போது காலத்தின் கலீஃபாவின் குத்பாவை கேட்க வேண்டும். எங்கு நேரங்களின் வித்தியாசம் உள்ளதோ அங்கும் கூட காலத்தின் கலீஃபாவின் குத்பா கேட்கப்படுதல் வேண்டும். நேரடி ஒளிபரப்பு கேட்க முடியவில்லை என்றாலும் ரெக்காடிங்கையாவது (ஒலிப்பதிவையாவது) கேட்க வேண்டும். இவ்வாறு இந்த குத்பாவில் விரிவான மேற்கோள்களை எடுத்து குத்பா கொடுக்கக்கூடிய முபல்லிக்மார்கள் மற்றும் முரப்பிகள் அதே நாளிலோ அல்லது அடுத்த நாளோ அல்லது அடுத்த ஜுமுஆவின் போதோ அந்த குத்பாவை படித்துக் காட்ட வேண்டும். அடுத்த வாரம் அடுத்த ஜுமுஆவில் அதை வாசித்துக் காட்ட முடியும். ஜமாஅத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு இது மிகச் சிறந்த வழிமுறையாகும். அல்லாஹ் இந்த கண்டுபிடிப்பின் மூலமாக காலத்தின் கலீஃபாவின் குத்பாவை அதன் ஒரு பகுதியாக்கி விட்டான்.

அல்லாஹ் கூறுகின்றான். இந்த உலக வியாபாரங்கள் மற்றும் கேளிக்கைகள் உங்களை ஜுமுஆ தொழுவதிலிருந்து தடுத்து நிறுத்தி விட வேண்டாம். நான் கூறியது போன்று இக்காலத்திற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்களின் காலத்தோடு ஒரு சிறப்பான தொடர்பு இருக்கின்றது. எனவே இன்று உங்களின் வியாபாரங்கள் வெறும் உள்ளூர் அளவிலான வியாபாரங்களாக இருக்கவில்லை. மாறாக, உலக அளவிலான சர்வதேச அளவிலான வியாபாரங்களாக இருப்பதினால் பணிகளும் அதிகமாக இருக்கின்றது. ஆனால் எல்லா நிலையிலும் ஒரு நம்பிக்கையாளர் ஜுமுஆவின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால், அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதே

ஒரு நம்பிக்கையாளருக்கு மிகவும் முதன்மையானதாக இருக்கின்றது. மேலும் இது தான் ஒரு நம்பிக்கையாளரின் முன்னுரிமையாக இருக்கவும் வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நபித்தோழர்கள் அன்னாரின் பரிசுத்த ஆற்றலின் காரணமாக முழுமையான முறையில் தூய்மை பெற்றிருந்தார்கள். அவர்களுக்கு அல்லாஹ்வின் திருப்தியே எல்லாவற்றையும் விட முதன்மையானதாக இருந்தது. எனவே அவர்கள் வியாபாரம் மற்றும் கேளிக்கைக்காக ஜுமுஆவை விட்டு விட்டார்கள் என்று நம்மால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. நிச்சயமாக இந்த கட்டளை நமது காலத்தைப் பற்றிய சித்திரமேயாகும்.

இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்களின் காலத்தைப் பற்றிய சித்திரமேயாகும். மார்க்க விஷயங்கள் பிற்படுத்தப்பட்டு உலக விஷயங்களுக்கே அக்காலத்தில் முன்னுரிமை வழங்கப்படும். 24 மணி நேரமும் வியாபாரம் மற்றும் கேளிக்கைகளின் மனிதன் மூழ்கி இருப்பான். உலக நாடுகளின் தூரம் குறைந்து விடும். வீட்டில் அமர்ந்தவாறே உலகின் பல்வேறு இடங்களில் நடக்கும் கேளிக்கைகளை எப்போதும் மனிதனால் கண்டு ரசிக்க முடியும். அல்லாஹ் கூறுகின்றான். அது போன்ற காலத்தில் நீங்கள் உங்களது முன்னுரிமைகளை சரியாக வைத்துக் கொண்டால் நீங்கள் அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசாகி விடுவீர்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஜுமுஆ தொழுகைக்காக பள்ளிக்கு வருகை தாருங்கள். மேலும் இமாமிற்கு அருகில் அமருங்கள். ஒரு நபர் கடைசியில் வரிசையில் அமர்வதனால் அவர் சொர்க்கவாசியாக இருந்தும் கூட சொர்க்கத்தை விட்டு பின்தங்கி விடுவார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்கள் ஜுமுஆவின் முக்கியத்துவம் பற்றி கூறினார்கள். அந்த முக்கியத்துவத்தின் அடிப்படையிலேயே அன்னார் 1895 அல்லது 1896 ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு ஜுமுஆ நாளன்று ஜுமுஆ தொழுவதற்காக குறைந்த பட்சம் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் விடுமுறை வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையை முன் வைத்து முஸ்லிம்களிடம் அதில் கையெழுத்தையும் வாங்கத் துவங்கினார்கள். ஆனால் அந்த தருணத்தில் முஹம்மது ஹுஸைல் பட்டாலவி ஒரு பிரசுரத்தை வெளியிட்டார். அதில் கூறினார். இது நல்ல வேலை தான். ஆனால் இந்த வேலை மிர்ஸா சாஹிபின் கைகளினால் நடக்கக்கூடாது. நாங்களே அதனை செயல்படுத்துவோம் என்று கூறினார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்கள் கூறினார்கள். எமக்கு பேருக்கும், புகழுக்கும் ஆசையில்லை. நீங்களே செய்து கொள்ளுங்கள் என்று கூறி தனது நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டார்கள். அதன் பின்னர் முஹம்மது ஹுஸைன் பட்டாலவிக்கோ அல்லது வேறு உலமாக்களுக்கோ அந்த திட்டத்தினை முன்னெடுத்து செல்வதற்கான பாக்கியம் கிடைக்கவில்லை.

அவர்கள் அதற்கான முயற்சியும் செய்யவில்லை. ஆனால் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்கள் இந்திய வாயிஸ்ராய்க்கு ஒரு மெமோரியல் ஒன்றை அனுப்பினார்கள். அதில் அவரின் சிறப்புகளை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். மற்ற முஸ்லிம்களின் உரிமையை நிலைநாட்டியதற்குரிய நன்றியையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்கள் அதில் தெரிவித்திருந்தார்கள்.

மேலும் தொடர்ந்து குறிப்பிட்டார்கள். எந்த கைகளின் மூலமாக இந்த பணிகள் நடைபெற்றுள்ளதோ அதே கைகளின் மூலமாக இன்னொரு பணியும் நடக்க வேண்டும் என்று முஸ்லிம்கள் ஆசைப்படுகின்றனர். அந்த ஆசை என்னவென்றால், ஜுமுஆ நாள் ஒரு மகத்துவமிக்க இஸ்லாமிய பண்டிகைக்கான நாளாகும். திருக்குர்ஆன் குறிப்பாக இந்த நாளை விடுமுறைக்கான நாளாக கூறியிருக்கின்றது.

அடுத்து அன்னார் கூறினார்கள். இந்த நாட்டில் ஹிந்து, கிருஸ்துவம் மற்றும் முஸ்லிம் என மூன்று சமுதாயங்கள் உள்ளன. ஹிந்துக்கள் மற்றும் கிருத்தவர்களுக்கு அவர்களின் மத சடங்குகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஞாயிற்றுக்கிழமையன்று விடுமுறை வழங்கியுள்ளது. ஆனால் இந்த மூன்றாவது பிரிவாகிய முஸ்லிம்கள் தங்களது பண்டிகைக்குரிய அந்த தினத்திலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருக்கின்றார்கள்.

அடுத்து அன்னார் கூறினார்கள். முஸ்லிம்களின் மீது செய்த மற்ற உபகாரங்களின் பட்டியலில் இந்த உபகாரத்தையும் சேர்த்துக் கொண்டால் அதாவது ஜுமுஆ நாளன்று பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் அது இந்த அரசாங்கத்தின் மாபெரும் உபகாரமாக அமையும்.

இன்று பெயர்தாங்கிய இஸ்லாமிய உலமாக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்களை ஆங்கிலேய கைக்கூலி என்று பழி சுமத்துகின்றார்கள். ஆனால் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு இஸ்லாமிய கட்டளைகளின் பக்கம் ஒரு நபர் கவனமூட்டினார் என்றால் அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்கள் தான். வேறு எந்தவொரு முஸ்லிம் தலைவருக்கும் அதற்கான பாக்கியம் கிடைக்கவில்லை. ஏனென்றால் இக்காலத்தில் இஸ்லாத்தின் முக்கியத்தை உலகிற்கு வெளிப்படுத்துவதும், இஸ்லாத்தின் உண்மையான போதனையின்படி செயல்பட வைப்பதும் அன்னார் மூலமாகவே நடைபெற இருந்தது. மேலும் அல்லாஹ் அன்னாரிடமே அந்த பணியை ஒப்படைத்திருந்தான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களாக நாம் வாதிடுகின்றோம். நமது ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் இஸ்லாமிய போதனைகளின் உண்மை வெளிப்பட வேண்டும். இந்த ரமலான் எந்த பரக்கத்துகளை எடுத்துக் கொண்டு வந்ததோ மேலும் எந்த பரக்கத்துகளை விட்டு செல்கின்றதோ அதை நாம் நமது வாழ்வின் அங்கமாக்கிக் கொள்வோம் என்று நாம் உறுதிமொழி எடுக்க வேண்டும். நாம் வெறும் ஒரு மாதத்திற்காக மட்டும் இஸ்லாமிய போதனைகளின் செயல் வடிவமாக இருக்கக்கூடாது. மாறாக, நிரந்தரமாக காலத்தின் இமாமிடம் செய்த உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

எனவே நாங்கள் பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றுபவர்களாக இருப்போம் என்று நாம் இன்று உறுதிமொழி எடுக்க வேண்டும். மேலும் ஒரு நம்பிக்கையாளரிடம் என்ன எதிர்பார்ப்பு உள்ளதோ அந்த எதிர்பார்ப்பிற்கேற்ப அல்லாஹ் மற்றும் படைப்பினங்களின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்வோம் என்றும் அல்லாஹ் எவ்வாறு நமக்கு கட்டளையிட்டிருக்கின்றானோ அதன்படி செயல்படுவோம் என்றும், எதனை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்களோ அதனை செயல்படுத்துவோம் என்றும் ரமலானின் பரக்கத்துகளை நாம் எப்போதும் நமது வாழ்க்கையின் அங்கமாக்கிக் கொள்வோம் என்றும் நாம் உறுதிமொழி எடுக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh, London – on 01.07.2016
Tamil Translation : Moulavi. Abdur Rahman Tahir Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516